## பதிவு செய்ய வரவேண்டியவர்களுக்கு அறிவிப்பு

படைக்கு ஆள்சேர்க்கும் சட்டம் 1970, பிரிவு 3 வழங்கும் அதிகாரச் சக்தியின் அடிப்படையில், 1 அக்டோபர் 2007 தேதிக்கும் 1 ஜனவரி 2008 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) பிறந்த ஒவ்வொரு சிங்கப்பூர் ஆண் குடிமகனும் ஒவ்வொரு சிங்கப்பூர் ஆண் நிரந்தரவாசியும் (இந்த அறிவிப்பில் பதிவு செய்பவர் என்றழைக்கப்படுபவர்) தேசிய சேவைக்குப் பதிவு செய்வது அவசியமென்பதை அதிகார அமைப்பு தெரிவித்துக் கொள்கிறது.

**தேசிய சேவைக்கான பதிவு**

**2.** பதிவு செய்பவர் 31 ஜூலை 2024 தேதிக்கும் 20 ஆகஸ்ட் 2024 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) தேசிய சேவைக்குப் பதிவு செய்தாக வேண்டும் -

(*a*) https://www.ns.gov.sg இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்; அல்லது

(*b*) 3 டெப்போ சாலை, சிங்கப்பூர் 109680 எனும் முகவரியில் அமைந்திருக்கும் மத்திய ஆள்பலத் தளத்திற்கு (CMPB) நேரடியாகச் சென்று பதிவு செய்யலாம்.

**மருத்துவப் பரிசோதனை**

**3.** அதிகார அமைப்பு வேறுவிதமாகத் தகவல் அளித்திருந்தாலொழிய, பதிவு செய்பவர் ஒவ்வொருவரும் -

(*a*) தேசிய சேவைக்குப் பதிவு செய்யும்போது, தனது மருத்துவப் பரிசோதனைக்கு 1 அக்டோபர் 2024 தேதிக்கும் 4 நவம்பர் 2024 தேதிக்கும் இடையில் (இரு தேதிகளும் உள்ளடங்கும்) ஒரு தேதியைக் குறிக்கவேண்டும்; அதோடு

(*b*) குறிக்கப்பட்ட தேதியில் தனது மருத்துவப் பரிசோதனைக்காகக் காலை 8 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையில் மத்திய ஆள்பலத் தளத்திற்குச் செல்லவேண்டும்.

| | |
|---|---|
| இடம்: | மத்திய ஆள்பலத் தளம்<br>CMPB - போடியம்<br>3 டெப்போ சாலை<br>சிங்கப்பூர் 109680 |
| செயல்படும் நேரம்: | திங்கள் முதல் வெள்ளி - காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி<br>சனிக்கிழமை - காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி<br>ஞாயிற்றுக்கிழமையும் பொது விடுமுறை நாட்களும் மூடியிருக்கும் |
| விவரம் கேட்டறிய: | 1800-3676767 |
| மின்னஞ்சல்: | contact@ns.sg |
| இணையத்தளம்: | https://www.ns.gov.sg |